# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 81 — 1973 ඔක්තෝබර් 12 වැනි සිකුරාදා — 1973.10.12

81ம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப்பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. .. | 395 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 397 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | 401 |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுகள் .. .. .. | 402 |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


**கவனிக்க.**—கைத்தொழிற் பிணக்குகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகவும், ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு இறைநிரப்பியாகவும் **பிரசுரிக்கப்பட்டுள்ளன.**

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

எல்.டி—பி29/62.

### இறைச்சிக்காரர் கட்டளைச்சட்டம்

(272 ம் அத்தியாயமான) இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் அதற்கான தக்க அதிகாரி அதாவது தெல்தெனியாப் பட்டினத்தின் விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டு அப்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகசெயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு செப்டம்பர் மீ 22 ந் உ.

### ஒழுங்குவிதிகள்

இறைச்சிக்கடைக்காரர் கட்டளைச் சட்டத்தின் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பொதுக்கொல்களம் சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரின் அல்லது அவரால் அதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட பொதுச் சௌக்கியப் பரிசோதகர் எவரதும் பொறுப்பில் இருக்கும். அத்தகைய உத்தியோகத்தர் அக்கொல்களத்தினுள் ஒழுக்காற்றுக்கும் கட்டுப்பாட்டுக்கும் சுகாதார நிலைமைகளுக்கும் பொறுப்பாளியாதல் வேண்டும்.

2. கொல்களத்தில் எவரேனும் எவ்விலங்கையும்—

(அ) அவ்விலங்கு கொல்லப்படுவதற்கு 24 மணித்தியாலங்களுக்குக் குறையாத காலத்துக்கு முன்னர்ச் சபையினால் ஏற்படுத்தப்பட்டுள்ள மாட்டுப் பட்டியில் அந்நோக்கத்துக்கு அடைத்து வைத்திருக்கப்பட்டிருந்தாலன்றியும் ;

(ஆ) அவ்விலங்கு சௌக்கிய வைத்திய உத்தியோகத்தரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள பொதுச் சௌக்கியப் பரிசோதகர் எவராலும் அல்லது அவர் சார்பாக அந்நோக்கத்துக்காகப் பதிற்கடமை யாற்றும் ஓர் உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்டு மனித பாவனைக்காகக் கொல்லப்படுதற்குத் தகுதியானதென்று அங்கீகரிக்கப்பட்டாலன்றியும் ;

(இ) எத்தினத்திலும் முற்பகல் 6 மணிக்கும் பிற்பகல் 6 மணிக்குமிடையிலன்றியும் கொல்லக்கூடாது ; ஆயினும், தலைவர் விசேடமான சூழ்நிலைகளில் இதில்சொல்லப்பட்டதல்லாத வேறு எவ்வேளையிலும் எவ்விலங்கையும் கொல்ல அனுமதிக்கலாம் ;

(ஈ) 2 (ஆ) என்னும் பந்தியின் கீழ் அவ்விலங்கு அங்கீகரிக்கப்பட்ட நேரத்திலிருந்து முப்பது மணிநேரம் கழிந்தபின்னர் எந்த நேரத்திலேனும் ; அத்துடன்

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்
அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.**

(உ) 2 (ஆ) என்னும் பந்தியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர்க் கொல்களத்திலிருந்து அது உயிருடன் அகற்றப்பட்டிருப்பின் மீண்டும் அது பாசோதிக்கப்பட்டு அப்பந்தியின்கீழ் மனித பாவனைக்காகக் கொல்லப்படுவதற்குத் தகுதியானதென்று அங்கீகரிக்கப்பட்டாலன்றி,

கொல்லக்கூடாது.

3. பந்தி 2 (அ)) வில் குறிப்பிடப்பட்டுள்ள மாட்டுப் பட்டியிருக்கும் வளவுகளுக்குள் அல்லது கொல்கள வளவுக்குள் எவ்விலங்கையும் கொண்டுவரும் ஆள் ஒவ்வொருவரும் அவ்விலங்கு அந்த வளவில் நிற்கையில் அதற்குப் போதிய ஆகாரமும் நீரும் ஊட்டப்படுதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்தல் வேண்டும்.

4. மாட்டுப்பட்டி வளவுகளுக்குள் அல்லது கொல்களவளவுக்குள் எவ்விலங்கையும் கொண்டுவரும் ஆள் ஒவ்வொருவரும் அவ்விலங்கு கொல்லப்படுவதற்குத் தகுதியற்றதென்று பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தரினால் நிராகரிக்கப்பட்டால் அவ்விதம் நிராகரிக்கப்பட்டவுடனே அவ்விலங்கை அந்த வளவில் இருந்து அப்புறப்படுத்தல்வேண்டும் அல்லது அப்புறப்படுத்துவிக்கவேண்டும்.

5. சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் அல்லது 2 (ஆ) என்னும் ஒழுங்குவிதியில் கூறப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், எவ்விலங்கையும், அது 2 (ஆ) என்னும் ஒழுங்குவிதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நோயுற்றதாக அல்லது மனித பாவனைக்காகக் கொல்லப்படுதற்குத் தகுதியற்றதாகக் காணப்பட்டால் அது கொல்லப்படுவதைத் தடை செய்யலாம்.

6. கொல்களத்தில் கொல்லப்பட்ட எந்த விலங்கினதும் இறைச்சி அல்லது கழிவு இறைச்சி நோயுள்ளது அல்லது மனித பாவனைக்குத் தகுதியற்றது என்று 2 (ஆ) என்னும் ஒழுங்குவிதியில் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர் எவரும் அபிப்பிராயப்படுவாரேல், அவர் அவ்விறைச்சியை அல்லது கழிவு இறைச்சியை உடனே அழித்துவிடும்படி அல்லது அந்த இறைச்சியை அல்லது கழிவு இறைச்சி விற்பதற்கு வைக்கப்படுவதனை அல்லது மனித உணவுக்கென உபயோகிக்கப்படுவதனைத் தடுக்கக்கூடிய விதத்தில் ஒழித்துவிடச் செய்யவேண்டும்.

7. கொல்களத்தின் பொறுப்பு உத்தியோகத்தர், மனித உணவுக்குத் தகுதியானதென அங்கீகரிக்கப்படாத அல்லது 4 ஆம் ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கொல்லுவது தடுக்கப்பட்ட எவ்விலங்கையும் கொல்ல அனுமதித்தல் ஆகாது.

8. ஆளெவரும்—

(அ) 2 (ஆ) என்னும் ஒழுங்கு விதியிற் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர் எவரதும் பணிப்புரையின் பேரிலன்றி 4 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் மனித உணவுக்குத் தகுதியற்றதென்று வெளிப்படுத்தப்பட்டுள்ள இறைச்சி அல்லது கழிவு இறைச்சி எதையும் கொல்களத்திலிருந்து அப்புறப்படுத்தலாகாது;

(ஆ) மனித பாவனைக்கான எவ்விலங்கினது சடலத்தையும், அச்சடலத்தின் முன்பாகத்தினும் பின்பாகத்திலும் கொல்களப் பொறுப்பு உத்தியோகத்தரால் " அங்கீகரிக்கப்பட்ட இறைச்சி " என்னும் அடையாளமும் " தெல்தெனியாப் பட்டினசபை " என்னும் சொற்களும் தோதான திகதியும் முத்திரை குத்தப்பட்டிருந்தாலன்றி கொல்களத்திலிருந்து அப்புறப்படுத்தலாகாது.

9. ஒரு விலங்கு வேறு எந்த விலங்கினதும் முன்னிலையிலும் அவ்வளவில் முன்பு கொல்லப்பட்ட ஒவ்வொரு விலங்கினதும் சடலம் அப்புறப்படுத்தப்பட்டு அல்லது மறைத்துவைக்கப்பட்டு அவ்வளவு சுத்தம் செய்யப்படும்வரையும் கொல்லப்படலாகாது.

10. தொற்றுநோய், ஒட்டுநோய் அல்லது சருமநோய் பீடித்தவராயுள்ள அல்லது சமீபகாலத்தில் பீடித்திருந்த எவரையும் அல்லது அத்தகைய நோயினால் பீடித்திருந்த ஒருவருக்குப் சமீபத்தில் பணிவிடை செய்த எவரையும் நோய் தொற்றும்கால எல்லையும் கழியும்வரை கொல்களம் எதற்குள்ளும் செல்லவேனும் எவ்விலங்கையும் கொல்லுவதில் பங்குகொள்ளவேனும் அக்கொல்களத்துக்குப் பொறுப்பாயுள்ள ஆளினால் அனுமதிக்கலாகாது.

11. கொல்களம் எதற்குள்ளும் நியாயமான எல்லா நேரத்திலும் பிரவேசிப்பதும் அதனைச் சோதித்தலும் அப்பிரதேசத்து சௌக்கிய வைத்திய உத்தியோகத்தருக்கு அல்லது தலைவருக்கு அல்லது தலைவரால் முறையாக அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கும் எவ்வுத்தியோகத்தருக்கும் சட்டமுறையானதாதல் வேண்டும். அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அவசியமாகும் சகல உதவிகளையும் அவருக்குச் செய்தல் வேண்டும்.

12. சபையால் தாபிக்கப்பட்ட கொல்களம் எதையும் உபயோகிப்பதற்கு கீழ்க்காணும் விகிதங்களின்படியான ஒரு கட்டணம் முற்பணமாகச் சபைக்குக் கொடுக்கப்படவேண்டும். வருமதியாகவுள்ள அக்கட்டணம் செலுத்தியமைக்கு எண்பிப்பாக அலுவலகப் பற்றுச்சீட்டு ஒன்று இல்லாமல் ஒரு விலங்கும் கொல்லப்படலாகாது :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| கால்நடைகளுக்குத் தலைக்கு .. .. | 2 | 0 |
| வெள்ளாடுகளுக்கு அல்லது செம்மறியாடுகளுக்குத் தலைக்கு | 1 | 0 |

13. கொல்களம் ஒவ்வொன்றினதும் பொறுப்பு உத்தியோகத்தர் தலைவர் பணிக்கும் அத்தகைய முறையில் அக்கொல்களத்தில் கொல்லப்படும் ஒவ்வொரு விலங்கையும்பற்றிய விபரங்களடங்கிய இடாப்பு ஒன்றைப் பேணுதல் வேண்டும்.

14. இந்த ஒழுங்குவிதிகளில்—

" விலங்கு " என்பது மாடு, வெள்ளாடு, அல்லது பன்றி எதுவும் எனப்பொருள்படும்;

" கால்நடை " என்பது எருமைகள் தவிர்ந்த சகல கால்நடைகள் எனப்பொருள்படும் ;

" தலைவர் " என்பது சபைத் தலைவர் எனப்பொருள்படும்.

" சபை " என்பது தெல்தெனியாபட்டின சபை எனப்பொருள்படும் ;

" செள்க்கிய வைத்திய உத்தியாகத்தர் " என்பது வத்தேகம சௌக்கிய வைத்திய உத்தியோகத்தர் எனப்பொருள்படும் ;

" பொதுச் சௌக்கியப்பரிசோதகர் " என்பது தெல்தெனியாப் பொதுச் சௌக்கியப் பரிசோதகர் அல்லது அவர் சார்பாகப் பதிற் கடமையாற்றும் வேறெந்தப் பொதுச் சௌக்கியப் பரிசோதகரும் எனப்பொருள்படும் ;

" மாட்டுப் பட்டி " என்பது சபையினால் தாபிக்கப்பட்டுள்ள மாட்டுப் பட்டி எனப்பொருப்படும் ;, அத்துடன்

" இறைச்சிக்காரர் " என்பது சபையினால் உரிமம் வழங்கபட்ட இறைச்சிக்கடைக்காரர் எனப்பொருள்படும்.

10–287—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81.

---

**பட்டினங்கள், கிராமங்கள் பெயர்கள் மாற்றம்**

இதனகத்துள்ள I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட கிராமத்தின் பெயர் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட பெயரால் பதிலீடு செய்யப்படுகிறது என்பதைப் பொதுமக்கள் தகவலுக்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீல் த அல்விஸ்,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 7, 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 28 ந் உ.

| மாவட்டம் | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| அம்பாறை | .. கொணுகொல்ல .. | செனறத்புர |

10–451—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

**சுன்னாகம் பட்டினம்—யாழ்ப்பாண மாவட்டம்**

பின்வரும் விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக—

1. திரு. க. நல்லநாதன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்,

2. திரு. பி. எல். பற்றிக், வலி தெற்கு உதவி அரசாங்க அதிபர், சுன்னாகம்,

3. திரு. கே. இராசரட்ணம், நில அளவை உதவி அத்தியட்சகர், நிலஅளவைக் கந்தோர், யாழ்ப்பாணம்,

ஆகிய மூவரையும் கொண்ட உத்தியோக பூர்வமான ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

1. சுன்னாகம் பட்டின சபையின் தற்போதைய எல்லைகளுக்கு அருகில் இருக்கும் பகுதியில் எவற்றையாவது அவற்றின் வருமானம், அவற்றில் வருங்காலத்தில் செய்ய வேண்டிய அபிவிருத்தி வேலைகள் முதலியவற்றை நோக்கி இப்பகுதிகளைப் பட்டின சபைப் பகுதிக்குச் சேர்க்கப்பட வேண்டுமா ? அப்படியாயின் புதிதாகச் சேர்க்கப்படும் பகுதியின் எல்லையை நிர்ணயித்தல்.

2. சனத்தொகை, வாக்காளர் தொகை, முதலியவற்றைக் கொண்டு இவ்வட்டாரங்களைத் திரும்பப் பிரிக்கப்படவேண்டுமா என்றும் அப்படியாயின் அவற்றின் எல்லைகளை நிர்ணயித்தல்.

3. பட்டின சபையின் அந்தஸ்த்தை நகரச பை அந்தஸ்த்திற்கு உயர்த்தப்பட வேண்டுமா ? இவை பற்றித் தங்களது அபிப்பிராயங்களைக் கூற விரும்பும் ஸ்தாபனங்கள் பொது மக்கள் தங்களது அபிப்பிராயங்களை முப்பிரதிகளில் 73.10.31 ம் திகதிக்குப் பிந்தாமல் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

க. நல்லைநாதன்,
உத்தியோகபூர்வமான குழுத் தலைவரும்
உள்ளூராட்சி உதவி ஆணையாளரும்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம், 1973 ந் ஆண்டு ஒக்டோபர் மீ 1 ந் வ.

10–346—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

---

**கிராம சபைகள் கட்டளைச் சட்டம்**
17 (5) ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட கிராமசபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (5) ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு, அம்பாரைப் பிரதேச உள்ளூராட்சி உத்வி ஆணையாளர், இராமச்சந்திரன் உருத்திரநாதன், ஆகிய நான் அம்பாரை மாவட்டத்தில் அமைந்துள்ள பாணமைக் கிராமசபைக்குத் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும் பொருட்டு, அக்கிராமசபையின் கூட்டமொன்றை 1973 ஒக்தோபர் மாதம் 23 ம் திகதி (1973.10.23) பிற்பகல் 2.00 மணிக்கு பாணமைக் கிராம சபைக் காரியாலயத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

ஆர். உருத்திரநாதன்,
அம்பாரைப் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் காரியாலயம்,
கச்சேரி, அம்பாரை,
1973 ந் ஆண்டு ஒக்டோபர் மீ 1 ந் வ.

10–454—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81.

---

# பதவிகள் — வெற்றிடம்

**" இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை " யின் IV ஆம் பகுதியின் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்**

**படிகள்.**—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

2. **சேவை நிபந்தனைகள்.**—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச்சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் எதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. **நியமன விதிகள்.**—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்த வேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவிகிதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவோர். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின்படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும் அச் சேவையில் வேறொரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச்சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள, திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு, விதவைகள் அனாதைகள், இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறுயினும் பெண்களும் 55 வயதுக்குமேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச்சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும்

பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள். 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச்சம்பள நிதிக்கு, தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சிமன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

4. உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளின்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்" தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை விளைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக் குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்தப்படுகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதன ஏற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் நிறுத்தப்படலாம்.

(5) கல்வியும் ஏனைய தகைமைகளும்.—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

குறிப்பு.—(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

குறிப்பு.—(2) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு.—(3) 4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து சேமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமைகளிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்கும் போர்ப்படைவீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. வயதுச்சலுகை.—இடையறாத் தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூராட்சி சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. வேண்டற்பால ஏனையவை.—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுதலைத் தாம் தயாரா? இல்லையா? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில்" விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணாமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

### வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

### உள்ளூராட்சிச் சேவை

முக்கியமாகக் கவனிக்க.—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 580, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யுமுன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பகாரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பகாரர் பின்வரும் சான்றுகளின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய அதி உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

......................................(........) பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி : ————.

(ஆ) ......................................பதவிக்கான விண்ணப்பம்

2. குடும்பப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ————.
 முதல் இனம் : ————.

(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா ? இலங்கையரல்லாதவரா ? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சரிபு எண்ணையும் திகதியையும் கூறுக.)

3. தபால் விலாசம் : ————
 (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது : —
 ————வருடங்கள் ————மாதங்கள் ————நாட்கள்,

(ஆ) பிறந்த திகதி :————. வருடம் :————.
 மாதம் :————. திகதி :————.

5. பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பகாரர் : ————.

(ஆ) அவரது பிதா : ————.

(இ) அவரது பிதாவழிப் பேரன் : ————.

(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ————.
 (விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா ? தனியாளரா ? அல்லது தாரமிழந்தவரா ? கைம்பெண்ணா ? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில்நுட்ப கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 ........ | | | 1 ........ | | |
| 2 ........ | | | 2 ........ | | |
| 3 ........ | | | 3 ........ | | |
| 4 ........ | | | 4 ........ | | |
| 5 ........ | | | 5 ........ | | |

8. கல்வித் தகைமைகள் :—

(அ) சி.பா.த. பத்திரம்/க.பொ.த.ப. (சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல் தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க.பொ.த.ப. (உயர்தரம்)

| பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|
| | | | | |

(இ) வேறும் கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) கீழ் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—
 1. சிங்களம் : ————.
 2. தமிழ் : ————.
 3. ஆங்கிலம் : ————.

9. பெற்றுள்ள எதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக : ————.

10. உயர்தொழில்/தொழில்நுட்ப/தொழில் அனுபவங்கள்

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) : ————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) : ————

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக : —

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் : ————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் : ————.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? : ————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் : ————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா? :—

(அ) சிங்களம் : ————.

(ஆ) தமிழ் : ————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக : ————.

14. ஒரு நீதிமன்றத்தில் எதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக : ————.

15. கடன் தொல்லையிலலாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? : ————.

16. வேறு எதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) : ————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளை இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) : ————

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையிலாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

---

### உள்ளூராட்சிச் சேவை

#### தரம் II வைத்திய பரிசோதனைக்கூடத் தொழில் நுட்ப வல்லுநர் பதவி
#### (நகர நுண்ணுயிரியல் உத்தியோகத்தர் பரிசோதனைக்கூடம்)

45 இலக்கமும் 02.02.73 தேதியுமிட்ட இலங்கைக் குடியரசு வர்த்தமானியின் 4 வது பகுதியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது. ஆண்பெண் பரீட்சார்த்திகளிடமிருந்து மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையால் கோரப்படுகின்றன. முந்திய விளம்பரத்தின் பிரகாரம் விண்ணப்பம் செய்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் இப்பதவிக்கு விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் முதலில் உடனடியாகக் கொழும்பு ம. ந. சபைக்கு நியமிக்கப்படுவர்.

3. **வேதனக்கிரமம்.**—வருடாந்தம் ரூபா 3,864—18 இன் 144—6,456. வருடாந்தம் ரூபா 4,584, 5,736 பெறுமுன் வினைத்திறமைகாண் தடை உண்டு. மணமான உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க திருமணப்படியும் கொடுக்கப்படும்.

மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனத்தின், மருத்துவ பரிசோதனைக்கூட தொழில் நுட்பச் சான்றிதழைப் பெற்றிருக்காத விண்ணப்பதாரர்கள், அச்சான்றிதழைப்பெற்ற பின்னர் மாத்திரமே மேற்கூறிய வேதனக் கிரமத்திற்கு உரித்துடையவராவார்கள். அவர்கள் பயிற்றப்படும் இரண்டு வருட காலப்பகுதியில் முதல் வருடத்தில் திரட்டிய படியாக ரூ. 3,000 மும், இரண்டாம் வருடத்தில் திரட்டிய படியாக 3,144 ம் அவர்களுக்குக் கொடுக்கப்படும். இரண்டு வருட முடிவில் சான்றிதழ் பெறப்படாவிட்டால் வேதனமொன்றும் கொடுக்கப்பட மாட்டாது.

4. **வேண்டிய தகைமைகள்.**—(அ) 12.11.1973 இல் 40 வயதுக்கு மேற்படாமல் விண்ணப்பதாரர்கள் இருத்தல் வேண்டும். (உள்ளூர் ஆட்சிச் சேவையில் இல்லாதவர்களுக்கு).

(ஆ) சி. பா. த. பத்திரத்தில் அல்லது இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் க. பொ. த. (சா. த) பத்திரத்தில் அல்லது ஒரு உயர்தரப் பரீட்சையில் இரசாயனத்தில் திறமைச் சித்தியும், பின்வரும் பாடங்கள் எதாவதொன்றில் திறமைச் சித்தியுடனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பௌதிகவியல், விலங்கியல், தாவரவியல் அல்லது உயிரினவியல்.

(இ) விண்ணப்பதாரர்கள் ஒரு நன்கு மதிக்கப்பட்ட மருத்துவ பரிசோதனைக்கூடத்தில் பயிற்சியும் அனுபவம் பெற்றிருப்பதுடன் மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட மருத்துவ பரிசோதனைக்கூட தொழில்நுட்பச் சான்றிதழையும் பெற்றிருத்தல் வேண்டும். இச்சான்றிதழை இன்னமும் பெற்றிருக்காமல், ஆனால் மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் உரிய பயிற்சி நெறியைப் பின்பற்றும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களும் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

5. இப்பதவி நிரந்தரமானதும் சகாயநிதி அடிப்படையிலும் உள்ளது.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி, ஏற்கெனவே மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் பயிற்றப்பட்டில்லாதிருந்தால், பயிற்சிநெறியை முடித்த பின்னர், உள்ளூராட்சிச் சேவையில் 3 வருடகாலம் சேவை செய்வதால் ஒரு ஒப்பந்தத்தைச் செய்தல் வேண்டும். பயிற்சி முடிவின் பின் உள்ள பரீட்சையில், பரீட்சார்த்தி சித்தியடையத் தவறினால் அவரது சேவைகள் நிறுத்தப்படக் கூடும்.

7. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் IV பகுதியில் உள்ள, உள்ளூராட்சிச் சேவை பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

8. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்களை நிரப்பியனுப்பப்பட வேண்டும். 12.11.1973 ம் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட இம்மாதிரிப் பத்திரத்தில் பின்வருவதைச் சேர்த்துக்கொள்ளவும் :—

" 8 (அ) கல்வித் தகைமைகளும், கடைசியாகச் சித்தியடைந்த பரீட்சையும், சித்தியடைந்த பாடங்களும், அத்துடன் உயர்தர கல்வித் தகைமைகளுக்கு அத்தாட்சியாக சான்றிதழின் பிரதியையும் இணைக்கவும்."

" (ஆ) விண்ணப்பதாரர், மருத்துவ பரிசோதனைக்கூட தொழினுட்பச் சான்றிதழைப் பெற்றிருக்கிறாரா என்பதைக் கூறவும். அவ்வாறு இல்லையாயின் அவர் பயிற்சிநெறியைப் பின்பற்றுகிறாரா எனக்கூறவும். (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.)"

"(இ) விசேட பயிற்சி, தகைமைகள் அல்லது அனுபவம் பற்றிய தகவல்கள்."

"(ஈ) பரிசோதனைக்கூட வேலைகள் பெற்ற அனுபவம் பற்றிய விபரங்கள்."

9. உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு விண்ணப்பங்களையோ அல்லது மற்றைய கடிதத்தொடர்புகளையோ விலாசமிட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

10. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியிலன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத்தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

11. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

எட்கா பொன்னுத்துரை,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
28.9.73.

10–302—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

### உள்ளூராட்சிச் சேவை

தரம் I, கைதேர்ந்த ஒட்டிப் பொருத்துபவர் (வாயு) பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் அதிகாரசபையால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி முதலில் உடனடியாகக் காலி மாநகரசபைக்கு நியமிக்கப்படுவார்.

2. இப் பதவி நிரந்தரமானது. நியமனம் சகாயநிதி அடிப்படையிலும் 3 வருடத் தகுதிகாண் நிலையிலும் உள்ளது.

3. **வேதனம் :** இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருமாறு : வருடாந்தம் ரூ. 3,240—12 × 60—3,960. மணமானவர்களுக்கு அரசாங்க விதிகளின் பிரகாரம் ஒரு திருமணப்படியும் வழங்கப்படும்.

4. **வேண்டிய தகைமைகள் :** (அ) 12.11.1973 தேதியில் 25 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்களுக்கும் ஏற்கனவே உள்ளூராட்சி மன்றங்களில் ஊழியர்களாக உள்ளவர்களுக்கும் மேலதிக வயதெல்லை பொருந்தமாட்டாது).

(ஆ) (1) வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் பதிவுகளை வைத்திருப்பதற்கும் தெரிந்திருத்தல் வேண்டும்.

(2) காய்ச்சி ஒட்டுதலில் தவறுகள் ஏற்படுவதன் காரணம் ; அதை ஏற்படாமற்றடுக்கும் முறைகள்பற்றியும், தரம் II கைதேர்ந்த ஒட்டிப் பொருத்துபவர் தரத்தில், காய்ச்சி ஒட்டுவதன் முன்னர், வார்ப்பை முன்னதாகச் சூடுபடுத்துவதின் அவசியத்தையும் அறிவதற்கு தெரிந்திருக்க வேண்டும்.

(இ) (1) உள்ளூராட்சிச் சேவையில் கைதேர்ந்த தரம் II ஒட்டிப் பொருத்துபவராக 8 வருட அனுபவம் இருத்தல் வேண்டும், அல்லது

(2) உள்ளூராட்சிச் சேவையில் கைதேர்ந்த தரம் II ஒட்டிப்பொருத்துபவராக குறைந்தது 3 வருடச் சேவை இருத்தல் வேண்டும். அத்துடன் நன்கு மதிக்கப்பட்ட நிறுவனத்தில் ஒரு கைதேர்ந்த தரம் I தொழிலாளராகக் குறைந்தது 6 வருட சேவை இருத்தல் வேண்டும், அல்லது

(3) ஒரு நன்கு மதிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் தரம் I கைதேர்ந்த ஒட்டிப் பொருத்துபவராகவும் உள்ளூராட்சிச் சேவையில் ஒரு தரம் II கைதேர்ந்த ஒட்டிப்பொருத்துபவராகவும் 9 வருட அனுபவம் (குறைந்தது) இருத்தல் வேண்டும்; அல்லது

(4) நன்கு மதிக்கப்பட்ட நிறுவனத்தில் ஒரு தரம் I கைதேர்ந்த ஒட்டிப்பொருத்துபவராக குறைந்தது 6 வருடச் சேவை இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—(1) 2ம், 3ம், 4ம், பந்திகளில் தனிப்பட்ட ஸ்தாபனங்களில் சேவையாற்றியதன் சார்பாக சான்றிதழ்கள் ஆதாரமாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்துடன் அவற்றின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) பந்திகள் 1, 2 என்பவற்றில் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்படாவிட்டால் மாத்திரமே பந்தி 3ல் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(3) மேற்கூறப்பட்ட வேறு தகைமைகளை உடையவர்களிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் பெறப்படாவிட்டால் மாத்திரமே மேற்படி பந்தி 4ல் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் கருத்துதிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(ஈ) விண்ணப்பதாரர்கள் நற்குணம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். (உள்ளூராட்சிச் சேவையில் அங்கத்தவர்களாக இல்லாமலும், உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றாமலும் இருக்கும் விண்ணப்பதாரர்கள், தமது விண்ணப்பத்துடன் இரு பொறுப்பானவர்களால் கொடுக்கப்பட்ட சான்றிதழ்களை அனுப்ப வேண்டும்).

5. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள, உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளுடன் சேர்க்கப்பட்டுள்ள படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 12.11.1973 ற்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட படிவத்தில் உள்ள 13 வது பகுதிக்குப் பதிலாக பின்வருவது சேர்க்கப்பட வேண்டும் :—

"13 (அ) காய்ச்சி ஒட்டுதலில் தவறுகள் ஏற்படுவதன் காரணம், அதை ஏற்படாமற்றடுக்கும் முறைகள்பற்றியும், காய்ச்சி ஒட்டுவதன் முன்னர் வார்ப்பை முன்னதாகச் சூடுபடுத்துவதின் அவசியம் பற்றியும் அறிவு :—

(ஆ) வாசிப்பதற்கும், எழுதுவதற்கும், பதிவுகளை வைத்திருப்பதற்கும் முடியுமா என்பது :—

(இ) அனுபவம் :—

விண்ணப்பத்துடன் பிறப்புச் சான்றிதழ்கள் மற்றைய சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகள் (மூலங்கள் அல்ல) இணைக்கப்பட வேண்டும். இத் தஸ்தாவேஜுகள் இன்றிப் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு விண்ணப்பங்களையோ அல்லது மற்றைய கடிதத் தொடர்புகளையோ விலாசமிட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

8. உள்ளூராட்சிச் சேவையிலோ அல்லது உள்ளூராட்சி மன்றத்திலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி தாம் நியமிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்கும்படி வேண்டப்படுவார்.

10. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

எட்கா பர்ணந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

த. பெ. 530,
கொழும்பு 1.
2.10.73.

10—343—12.10.73 ந திகதிய வர்த்தமானி இல. 81

## உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)**

கீழேயுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 4 (1) (சி) பிரிவின் கீழ் 1973, ஒக்ரோபர் 15 ம் திகதியிலிருந்து அவர்கள் பெயர்களுக்கு நேரே காட்டியுள்ள மாவட்டங்களது தேர்தல்கள் உதவி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்களென்று, இத்தால் பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எவ். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூரச் சபைகள்)

கொழும்பு 7, 1973 ந ஆண்டு செப்தெம்பர் மாதம்

அட்டவணை

| பெயர்கள் | மாவட்டங்கள் |
|---|---|
| 1. இலங்கை நிருவாக சேவை, III ம் வகுப்பு, திரு. ஆர். ஐ. சீ. குருப்பு | கொழும்பு |
| 2. இலங்கை நிருவாக சேவை, III ம் வகுப்பு திரு. பி. குலதுங்க | குருநாக்கல் |
| 3. இலங்கை நிருவாக சேவை, III ம் வகுப்பு திரு. டபிளியூ. டீ. எஸ். பெரேரா | நுவரெலியா |
| 4. இலங்கை நிருவாக சேவை, III ம் வகுப்பு திரு. ரீ. கே. தசநாயக்க | மொனருகலை |

10—238—12.10.73 ந திகதிய வர்த்தமானி இல. 81

# வரவு செலவுத் திரட்டுக்கள்

**ஊர்காவற்றுறைப் பட்டினசபை**

28.08.73ல் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தின் 9 ம் இலக்கத் தீர்மானம்

**தலையங்க மாற்றம்—நிதிப் பிரமாணம் 40 (ii)**

பட்டினசபை நிதிப் பிரமாணம் 40 (ii) ன் கீழ் பின்வரும் செலவினத் தலையங்க மாற்றம் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

பகுதி II—மின்சாரம்

| சேமிப்பு | ரூ. ச. | மேலதிகம் | ரூ. ச. |
|---|---|---|---|
| ஈடீ–13—தளபாடங்களும் உபகரணங்களும் .. | 1,000 0 | ஈடீ–15—வீதி வெளிச்சம் .. | 1,000 0 |
| | 1,000 0 | | 1,000 0 |

பிரேரித்தவர்: திரு. வீ. ரி. செல்வரெத்தினம் அவர்கள்.

ஆமோதித்தவர்: திரு. எஸ். ஏ. எவ். துரைசிங்கம் அவர்கள்.

உண்மைப் பிரதியென உறுதிப்படுத்தப்பட்டது.

வி. இம்மானுவல்,
தலைவர்,
பட்டினசபை, ஊர்காவற்றுறை.

10–324/1—12.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 81

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | 05.10.73 | வெள்ளி | 28. 9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 12.10.73 | வெள்ளி | 05.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 19.10.73 | வெள்ளி | 12.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 26.10.73 | வெள்ளி | 19.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| நவெம்பர் | 02.11.73 | வெள்ளி | 26.10.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 09.11.73 | வெள்ளி | 02.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி | 09.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி | 16.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி | 23.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| திசெம்பர் | 07.12.73 | வெள்ளி | 30.11.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 07.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 14.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 21.12.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் வ.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.